Registered as a NewsPaper in Ceylon

★ ★ விலை: சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

WOLSELEY
வூல்சிலி 2"
நீர் இறைக்கும் யந்திரங்கள்
உபகரணங்களுடன்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 18 ஆவணி 16 றஜப் 10 (1—9—7) புதன்கிழமை இதழ் 202

யாழ். மாநகர எல்லைக்குள்

1972 ஜனவரிமுதல் சோலைவரி குறையும்; மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் சோலை வரி அடுத்த வருடம் முதல் ஒன்றரை வீதம் குறைக்கப்பட இருக்கிறது.

சோலைவரி அதிகரித்ததை விட்டு வரியிறுப்பாளர்களும், மாநகரசபை உறுப்பினர்களும், மேயரிடம் தெரிவித்த [illegible] தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பன்னிரண்டரை வீதமாக உள்ள சோலைவரி 72-ம் ஆண்டு முதல் பதினொரு வீதமாகக் குறைக்கப்படவிருப்பதாக யாழ் மேயர் திரு. துரையப்பா தெரிவித்தார்.

மேயராக திரு. துரையப்பா தெரிவுசெய்யப்பட்டதும் முதல் கூட்டத்தில் சோலைவரியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியிருந்ததோடு திரு. துரையப்பா [illegible] கோஷ்டியிலிருந்தபோது வரி அதிகரிப்பை பலமாக ஆட்சேபித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

4 மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு ரத்து

கொழும்பு, புதன்

அனுராதபுரம், புத்த[illegible] பொலன்நறுவை ஆகிய நான்கு நிர்வாக மாவட்டங்களிலும் அண்மையில் அமுல்செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்று முதல் [illegible]திலிருந்து முற்றாக நீக்கப்படுவதாக நேற்று அரசாங்கம் அறிவித்தது.

மேற்கு மாகாணத்தில் மட்டும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருக்கும். இன்று இரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கும்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றம்

நகைக்கடை முதலாளி கொலைவழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலை வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில், நீதியரசர் ஓ. எல். டி. கிரெட்சர் முன்னிலையில் இரண்டாவது தினமாக நேற்று விசாரணை செய்யப்பட்டது. நேற்றும் ஜூரி சபையினர் இல்லாத நேரத்தில் விசாரணை நடைபெற்றது.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் 68ம் ஆண்டு அக்டோபர் 1ம் திகதிக்கும் 68ம் ஆண்டு நவம்பர் 3ம் திகதிக்கும் இடையில் முகமது சுல்தான் முஹீதீன் என்பவரை கொலை செய்ய சபாரத்தினம் ராமச்சந்திரன், செல்லத்துரை நடராசா ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து ஒரே நோக்குடன் சூழ்ச்சி செய்ததாகவும் அந்தச்சூழ்ச்சியினால் அவர் கொலை செய்யப்பட்டதாகவும் 68ம் ஆண்டு நவம்பர் 2ந் திகதி ராமச்சந்திரன் என்பவர் முகம்மது சுல்தான் [illegible] கொலைசெய்ததாகவும் அதே நேரத்தில் அதே இடத்தில் நடராசா 1ம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்கு உடந்தையாக இருந்தாரென்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இலங்கை வெற்றி

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் காலியில் நடைபெற்ற 4-வது டேபிள் டெனிஸ் போட்டியில் இலங்கை மீண்டும் 5—3 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

வடபகுதியில் ஒருலட்சம் ரூபா பெறுமதியான தந்திக்கம்பி களவு

யாழ்ப்பாணம், புதன்

கடந்த மூன்று மாதகாலத்தில் வடபகுதியில் சுமார் 35,000 ரூபா பெறுமதியான தந்திக்கம்பி களவுபோயுள்ளதாகவும் திருட்டுப்போன தந்திக்கம்பிகளுக்குப் பதிலாக மீண்டும் தந்திக்கம்பிகளை இணைப்பதற்கு தபால் தந்திப் பகுதிக்கு ஒரு லட்சம் ரூபா செலவாகியிருப்பதாகவும் தபால் தந்திப் பகுதியினரும் பொலிஸாரும் தெரிவித்தனர்.

மன்னார்ப் பகுதியில் பேசாலையிலும், யாழ்ப்பாணத்தில் அரியாலை, நாவற்குழி ஆகிய இடங்களிலும் தந்திக்கம்பித் திருட்டு அதிகரித்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தங்கத்துடன் கலப்பதற்கும், வெங்கலத்துடன் கலப்பதற்கும், தந்திக்கம்பியிலிருந்து ஆணிகள் செய்து மீன்பிடி வலைகளுக்கு உபயோகிப்பதற்கும் தந்திக்கம்பிகள் உபயோகிக்கப்படுவதாகப் பொலிஸார் கருதுகின்றனர். விஷயம் தெரிந்தவர்கள் மட்டுமே இக்களவில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. தந்தி இலாகாவில் வேலைசெய்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது வேலை செய்பவர்களின் உதவியுடன் வெளியிலுள்ளவர்களே இதில் ஈடுபடுகிறார்களெனப் பொலிஸார் நம்புகின்றனர்.

தந்திக் கம்பிகளை வீடுகளிலும் அல்லது கடைகளிலும் தெரிந்தோ அல்லது தெரியாமலோ வைத்திருப்பது இப்போதுள்ள சட்டத்தின்கீழ் பெரும் குற்றம் என்றும் அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு வியாபாரி வீட்டில் தந்திக்கம்பி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சந்தேக நபர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கம் கூறினார்.

தந்திக்கம்பி களவைத் தடுப்பதில் வடபகுதி பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் அகப்படுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நவீன சந்தையைக் கட்டி முடிக்க இரண்டு மாத அவகாசம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் கட்டிமுடிப்பதற்கு மைற் ஸ்தாபனத்தாருக்கு இன்று முதல் மேலும் இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். மேயர் திரு அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

மைற் ஸ்தாபன அதிபர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா மார்க்கட்டைக் கட்டிமுடிப்பதற்கு மேலும் 4 மாதகால அவகாசம் கேட்டிருந்ததாகவும் மேயர் தெரிவித்தார்.

ஏற்கனவே போதிய அவகாசம் வழங்கப்பட்டுவிட்டதாகவும் இந்த 2 மாதத்தை தவிர மேலும் அவகாசம் கொடுக்கப்படமாட்டாதென்றும் மேயர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் நவீனமார்க்கட் வேலைகள் முடிவடையாவிட்டால் மாநகரசபை பொறுப்பேற்கும் என மேயர் திரு துரையப்பா தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும் மைற்ஸ்தாபன அதிபர் மேலும் 4 மாத அவகாசம் தரும்படி கோரியதைத் தொடர்ந்து 2 மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

செனட்டில் தாமதமான மசோதா

மகா தேசாதிபதியின் அங்கீகாரம் கிடைத்தது

கொழும்பு, செவ்வாய்

உழைக்கும்போதே வரி செலுத்தும் மசோதாவுக்கு மகாதேசாதிபதி இன்று அங்கீகாரம் வழங்கினார்.

கடந்த ஜூலை மாதம் 20ந் திகதி சகல கட்டங்களிலும் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இம்மசோதா ஜூலை மாதம் 23ந் திகதி செனட்சபையின் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டது. ஒரு மாத காலத்திற்குள் செனட்சபை இம்மசோதாவுக்கு அங்கீகாரம் அளிக்காததால் இலங்கை ஆட்சிமன்ற அரசமைப்புக் கட்டளைச் சட்டத்தின் 33ம் பிரிவின் கீழ் மகா தேசாதிபதியின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டது. மகாதேசாதிபதி இம்மசோதாவுக்கு இன்று அங்கீகாரம் வழங்கினார்.

இம்மசோதாவுக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டதால் உழைக்கும்போதே வரி செலுத்தும் திட்டம் விரைவில் அமுலுக்கு வரும்.

மன்னார், செவ்வாய்

மன்னார்ப்பகுதியில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக, குளங்கள் - குன்றுகள் எல்லாம் நீர் வற்றி வரண்ட பாலைவனம்போல காட்சிதருகிறது.

உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில்

வல்வெட்டி புளூஸிடம் சிங்கிங்பிஷ் தோல்வி!

மத்தியஸ்தர் 4 வீரர்களை வெளியேற்றினார்

யாழ்ப்பாணம், புதன் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் 'சிங்கிங்பிஷ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலில் வல்வெட்டித்துறைக் கழகம் ஈற்றில் வெற்றி பெற்றது.

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினால், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியிலேயே மேற்படி மோதல் நடைபெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி இடைவேளைவரை வல்வெட்டித்துறைக் கோஷ்டி மிகச் சிறப்பாக விளையாடி அடுத்தடுத்து இரு கோல்களை மின்னல் வேகத்தில் வி. குணநாதனும், எஸ். தங்கவடிவேலும் போட்டனர். சிங்கிங்பிஷ் கழகம் ஒரு கோலை மட்டுமே போட்டது. இக்கோலை வலதுகரை முன்னணி வீரர் எம். றேமன் போட்டார்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் இரு கோஷ்டியினரும் ஒருவருடன் ஒருவர் மிகவும் முரட்டுத்தனமாக மோதிய வண்ணமே இருந்தனர். இதனால் இரு கோஷ்டிகளிலுமிருந்து தலா இரு வீரர்களை மத்தியஸ்தர் மைதானத்தை விட்டு வெளியேற்றினார்.

ஆட்டம் முடிவடைவதற்கு சில விநாடிகள் இருக்கும் போது சிங்கிங்பிஷ் கோஷ்டியினர், எதிர்க் கோஷ்டியை மிகக் கடுமையாகத் தாக்கி ஒரு கோலைப் போட்டனர். இக்கோலை வீரர் அலெக்ஸின் போட்டார். இரு கோஷ்டிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால், மத்தியஸ்தர் மேலதிகமாக 10 நிமிடங்களுக்கு ஆட்டத்தை நீடித்தார். இதிலும் இரு கோஷ்டிகளும் கோல்கள் எதையும் போடாததனால் மத்தியஸ்தர் இரு கோஷ்டிகளுக்கும் தலா '5 பெனல்டி' உதைகளை வழங்கினார். இக் கட்டத்தில் வல்வெட்டித்துறைக் கோஷ்டி 5 புள்ளிகளையும், சிங்கிங்பிஷ் கோஷ்டி 2 புள்ளிகளையும் பெற்றமையால், வல்வெட்டித்துறை புளூஸ் இப் போட்டியில் வெற்றி பெற்றதாகக் கணிக்கப்பட்டது.

இப்போட்டியில், வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் எஸ். செல்வச்சந்திரன் பல தடவைகள், ரசிகர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றார்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)

ராணி (யாழ்ப்பாணம்) ரவிச்சந்திரன் • காஞ்சனா
நாகேஷ் • மனோகர் நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நாலும் தெரிந்தவன்

3-வது ஜனத்திரள் வாரம்
வெலிங்டன் லிடோ
(யாழ் நகர்) (யாழ்.நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 காலை 10-30, பி. ப. 2-00
இரவு 10-00 மணி. மாலை 6 00, இரவு 9-30
மற்றும்
கெப்பிட்டல்—பிளாசா
திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
தெய்வ மகன்
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்

வின்சர் யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ பி. எஸ். வீரப்பா ★ நிர்மலா
நடித்த
சங்கமம்

வின்சன் இல்லம் முதலிடம்

தாவடி, செவ். கட்டப்பராய் கலைமணி சனசமூக நிலைய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் வின்சன் இல்லம் முதலாமிடத்தைப் பெற்றது. கென்னடி இல்லம் இரண்டாமிடத்தையும், விஜயன் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

நாகலக்ஷ்மி ஸினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
ONE SPY TOO MANY
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எல்லாம் உனக்காக

வெஸ்லி சினிமா
மானிப்பாய
பி ப 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
அன்னையும் பிதாவும்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p m.
Sat, Sundays 10-30 a. m.
David Hamming
in
ALFRED THE GREAT
தினசரி பி.ப. 2-00, 9-45
திலீப்குமார்-வைஜந்திமாலா
நடித்த
பாட்டாளியின் சபதம்

'மனப்பூர்வமாக முயற்சிகளை மேற்கொள்க'

கொழும்பு, செவ்வாய் 'தமது நன்மைக்காக மாத்திரமின்றி சமூகத்தினது நன்மைக்காகவும் விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் தொழில்நுட்ப நிபுணர்களும் மனப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாதது'

இவ்வாறு கொழும்பு சென் பீட்டர்ஸ் கல்லூரியில் நடைபெற்ற அரசாங்கப் பொறியியலாளர் சங்கக் கூட்டத்தின்போது பேசுகையில் தபால்தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு செ. குமாரசூரியர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், அரசியல்துறையில் தொழில்நுட்ப நிபுணர்கள் பிரவேசிப்பது போதிய அளவில் இல்லை எனவும் இந்நிலை மாறவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரி பாலசேனநாயக்காவும் உரையாற்றினார்.

கிறீன்பீல்ட்' நடாத்தும்

கரபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டு கழகத்தின் வருடாந்த விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வரும் கரபந்தாட்ட நொக்கவுட் போட்டி நேற்று முன்தினம் கழக மைதானத்தில் மிக குதூகலமாக ஆரம்பமானது. முதல் நாள் போட்டியில் 'கலாஜோதி' கழகமும், 'ஈச்சமோட்டை யுனைட்டட்'டும் வெற்றி பெற்றது.

கலாஜோதி விளையாட்டுக் கழகமும் மத்தியூஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கலாஜோதி கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

ஈச்சமோட்டை யுனைட்டெட் கழகத்துக்கும், 'றிமேர்' கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் ஈச்சமோட்டை யுனைட்டெட் 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

அம்பாலை விளையாட்டுக் கழகமும், நெக்கிளமேசன் சனசமூக நிலையமும் ஆட்டத்தில் பங்குபற்ற வராததினால்; கிறீன்பீல்ட் கழகமும், திருநெல்வேலி சிவன் கழகமும் விளையாடாமல் வெற்றியைத் தட்டிக் கொண்டன.

இவ்விரு போட்டிகளுக்கும், திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
பெண்ணே நீ வாழ்க

MANOHARA
(Jaffna)
To-day only
4-45 7-00 & 9-45 p.m.
Brad Harris,
Maria Pershy
in
077 OPERATION
HONG KONG
(Criminals of Hong Kong)
நாளை முதல்
பம்பாயில்
சி. ஐ. டி. 555

வரிவிளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

துரித சலவைக்கு மிக்க வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள். பாவித்த வெற்றுறை ஒன்றை அனுப்பி எமது வெளியீட்டுப் புத்தகங்களில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்க வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

விற்பனைக்கு

சோமசெற் EY 6380 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆ. நடராசா, தாவடி. 3537

ராதா பயோறியா பற்பொடி. பயோறியா, முரசுகரைதல், சீழ் வடிதல் முதலிய சகலவிதமான பல்வியாதிகளுக்கு சிறந்த நிவாரணி. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160 செட்டியார் தெரு, கொழும்பு. 3523

பரந்தன் 4-ம் வாய்க்காலில் ஆறு ஏக்கர் கொண்ட கொல்லிலே நெற்காணி ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: செல்வி து. தவமணி, 72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 3522

கல்வி

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான கலை, விஞ்ஞான, வர்த்தக, விசேட ஆங்கில, சிங்கள (காலை/மாலை) வகுப்புகளும் நுண்கலை (Fine Arts) புதுமுக வகுப்புக்களும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர். 3517

TUITION

Home visited tuition available by advance level qualified student for ordinary level students in Maths, Applied, Physics Preferable in Jaffna. Reasonable rate. Advt. No 3536, C/o EELANADU, Jaffna. 3536

வாடகைக்கு

கல்லாகம் மின் ஒழுங்கையில் நவநாகரிக வசதிகளுடன் கூடிய பெரிய வீடும் வளவும் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: செல்வி து. தவமணி, 72. கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 3521

எதிரி பிணையில் சென்றார்

யாழ்ப்பாணம், புதன் ஒட்டிசுட்டான் கொலை வழக்கில் எதிரி 2000 ரூபா பிணையில் சென்றார். இவ்வழக்கு முல்லைத்தீவு மாஜிஸ்டிரேட் திரு. விக்கிரமசூரியா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 71-ம் ஆண்டு ஜூன் மாதம் ஜேம்ஸ் சிங்கோ என்பவர் டொன் கரோலிஸ் என்பவரை கொலை செய்ததாய் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் ஆஜரான புறக்டர் வி ஏ ஈ பாலசிங்கம் எதிரியை பிணையில் விடக் கோரியதைத் தொடர்ந்து மாஜிஸ்டிரேட் எதிரியை பிணையில் செல்ல அனுமதித்தார்.

அமெரிக்க ஆயுதங்களை ஜோர்டான் அரபுகளுக்கு எதிராகப் பாவிக்கிறதாம்

எகிப்திய அதிபர் குற்றச்சாட்டு

பாலஸ்தீன மக்களை அழிப்பதாகவும் கூறுகிறார்

கெய்ரோ, ஆகஸ்ட் 31

இஸ்ரேலுக்கு எதிரான அரபு மக்களின் போராட்டத்திலிருந்து ஜோர்டான் விலகியிருப்பதாகவும், மன்னர் ஹுசேன் ஜோர்டானிலுள்ள பாலஸ்தீன விடுதலை முன்னணியினரை அழித்துவருவதாகவும் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி திரு. அன்வர் சதாத் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார்

ரேடியோ, டெலிவிஷன் பேட்டி ஒன்றிலேயே திரு. சதாத் ஜோர்டானை இவ்வாறு கண்டித்தார்

அப்பேட்டியில் திரு. சதாத் மேலும் தெரிவிக்கையில், இஸ்ரேலுக்கு எதிரான அரபு மக்களின் போராட்டத்தில் ஜோர்டான் கலந்துகொள்ளவில்லை. சமாதான வழியிலானாலும் போர்முறையிலானாலும் அரபு அணியில் சேர்ந்துகொள்ளவில்லை. அமெரிக்கா கொடுத்த ஆயுதங்களைக் கொண்டு ஜோர்டான் சிரியாவின் எல்லையில் யுத்தப் பயமுறுத்தல்செய்து கொண்டிருக்கிறது என்று குற்றஞ்சாட்டினார்

ஐ. அ. குடியரசு, சிரியா, லிபியா ஆகிய நாடுகளின் கூட்டிணைப்பு அரபுமக்களின் புதிய திடசங்கற்பமாகும் என்று திரு. சதாத் அரபுக் கூட்டமைப்புப் பற்றி வர்ணித்தார்.

இதேவேளையில் சிரியா மக்கள் புதிதாக அமைக்கப்படவிருக்கும் அரபுக் கூட்டமைப்பை விரும்புகிறார்களா அல்லது சுதந்திரமான தனி நாடாகவே இருக்க விரும்புகிறார்களா என்பதை தெளிவாகப் புலப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக சிரியா அதிபர் திரு. அசாத் டமாஸ்கஸ்சில் தெரிவித்தார்

ஜோர்டான் மறுப்பு

சிரியா எல்லையில் ஜோர்டான் துருப்புக்கள் நிறுத்தப்பட்டுவருவதாக ஐ. அ. குடியரசு ஜனாதிபதி திரு. சதாத் சுமத்திய குற்றச்சாட்டை ஜோர்டான் இராணுவப் பேச்சாளர் ஒருவர் அம்மானில் மறுத்தார்

இஸ்ரேல் புகார்

நான்கு எகிப்திய போர் விமானங்கள் இஸ்ரேல் வசமுள்ள சூயஸ் கால்வாய் பகுதியில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மூன்று நாட்களில் எகிப்து நடத்திய இரண்டாவது தாக்குதல் இதுவெனக் கூறப்படுகிறது.

விமான ஓட்டியின் துணையின்றி

விமானத்தைப் பாதுகாப்பாக இறக்கிவிடும் அதிசயக்கருவி

லண்டன், ஆக 31

விமானமோட்டியின் துணையின்றி, கார் படர்ந்தகால நிலைகளிலும், கண்களால் நேரே பார்த்து உணரமுடியாத சூழல்களிலும் விமானத்தைத் தன்னியக்கமாக விமானத் தளத்தில் இறக்கிவிடும் அபார சக்தியுடைய ரைடன்ற் விமானங்களை பிரிட்டிஷ் ஐரோப்பிய ஏயர்வேஸ் ஸ்தாபனம் இன்று உருவாக்கியுள்ளது.

விமானத் தளத்தைக் கண்களால் பார்த்தறிய முடியாத சமயங்களில், விமானமோட்டி, விமானத்தில் இணைக்கப்பட்டிருக்கும் தன்னியக்க சாதனத்தைத் திருப்பிவிட்டால், அது விமானம் இறங்க வேண்டிய குறித்த இடத்தில் குறிப்பிட்ட வேகத்தில், மிகவும் பாதுகாப்பாக விமானத்தை இறக்கி விடும்.

கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் தன்னியக்கசாதனங்கள் 3,000 தடவைகள் ஒருவித பாதிப்புகளுமின்றி ரைடன்ற் இராட்சத விமானங்களைத் தளத்தில் இறக்கியுள்ளன. விமானமோட்டியின் உதவியுடன் தளத்தில் இறங்குவதிலும் பார்க்க தன்னியக்க சாதனத்தின் உதவியுடன் இறங்குவது பத்துமடங்கு பாதுகாப்பானது எனக் கூறப்படுகிறது.

உகண்டாவுக்கு சீனா மறுப்பு

பீகிங், ஆக. 31

தான்சானியாவுக்கும் உகண்டாவுக்குமிடையே நடந்த எல்லைச்சண்டையில் கொல்லப்பட்ட தன்சானியாப் படைகளில் சீன சேனை ஒருவரும் இருந்தார் என்ற உகண்டாவின் குற்றச்சாட்டுக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

சில நாட்களுக்குமுன் இரு நாடுகளுக்குமிடையே நடந்த எல்லைச்சண்டையில் கொல்லப்பட்ட தான்சானியத் துருப்புக்களிடையே கம்யூனிஸ்ட் சீன சேனை ஒருவரும் இருந்தார் என்று உகண்டா ஜனாதிபதி ஜெனரல் அமீன் தெரிவித்திருந்தார்.

வெற்றியைக் கேட்டதும் மரணம்!

சென்னை, ஆகஸ்ட் 31

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்ற செய்தியை வானொலி மூலம் கேட்டுக்கொண்டிருந்த நபர் ஒருவர் வியப்பினால் அதிர்ச்சியுற்று மரணமானார். கிருஷ்ணன் எனப்படும் 30 வயதான இந்நபர் ஏனைய கிரிக்கட் ரசிகர்களுடன் வானொலி மூலம் இதுபற்றிய நேர்முக வர்ணனையை கேட்டுக்கொண்டிருந்தபோது இந்தியாவின் வெற்றியைக் கேட்டதும் அறிவிழந்து வீழ்ந்ததாகவும் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது இவர் உயிர் பிரிந்ததாகவும் கூறப்படுகிறது.

கள்ளு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பினர்

முதல்நாளே விற்பனை பிரமாதம்

சென்னை, ஆக. 31

தமிழ் நாட்டில் மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டதும் நேற்று பெரும் வியாபாரம் நடைபெற்றுள்ளது. சென்னையில் பலபகுதிகளிலும் கள்ளுச் சாராயம் முதலியவற்றை வாங்குவதற்கு மக்கள் ஆர்வம் காட்டினர். செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும் 574 கள்ளுக் கடைகளிலும் 244 சாராயத் தவறணைகளிலும் வியாபாரம் நடைபெற்றுள்ளது. கள்ளு கையிருப்புக்குறைந்ததும், கள்ளு வாங்கவந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியது பரிதாபமாக இருந்தது. இருப்புக்குறைந்ததினால் சாராயத்தவறணைகள் பல மூடப்பட்டன.

நிரந்தரமான பதிவாளர்

ஊரதீவு, செவ்வாய்

புங்குடுதீவுப் பகுதிக்கென நிரந்தரமான இறப்பு பிறப்பு விவாகப்பதிவுகாரர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளார். இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகின்றன. தற்போது தற்காலிக பதிவுகாரர் ஒருவரே கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

'உத்தரவாதமின்றி அகதிகளை திருப்பி அனுப்பமாட்டோம்'

இந்திராகாந்தி உறுதி

புதுடில்லி, ஆகஸ்ட் 31

அகதிகள் பாதுகாப்புடன் திரும்பிச்செல்வதற்கான உத்தரவாதம் அளிக்கப்படும் வரை அவர்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

இந்தியாவின் வட எல்லைப் பகுதியான இஸ்லாம்பூரிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவிலுள்ள பூர்னியா என்ற இடத்தில் நடந்த கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் கூட்டத்திலேயே திருமதி காந்தி இவ்வாறு தெரிவித்தார்.

எல்லைப் பகுதிகளிலுள்ள அகதிகள் முகாம்களை பிரதமர் இந்திராகாந்தி சுற்றிப் பார்வையிட்டார்.

காடில்கார் கருத்து

கடந்த ஒருவாரத்தில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மேலும் 3 லட்சம் அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருப்பதாக தொழிலாளர் வேலைவாய்ப்பு சீரமைப்பு அமைச்சர் திரு எஸ் கே காடில்கார் தெரிவித்தார்.

பாக் தூதுவர் கண்டனம்

செனட்டர் எட்வர்ட்கென்னடியும், அமெரிக்கமக்களும் இந்தியாவின் பிரச்சாரத்தினால் தவறான வழியில் திசை திருப்பப்பட்டதினாலேயே பாகிஸ்தான் பிரச்னையில் அவர்கள் தவறான கருத்துக் கொண்டுள்ளனர் என்று வாஷிங்டனிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் திரு ஹிலாலி பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவின் அகதிகள் முகாம்களை சுற்றிப் பார்த்துவிட்டு அமெரிக்கா திரும்பிய எட்வர்ட் கென்னடி வெளியிட்ட சில கருத்துக்கள் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையிலேயே பாகிஸ்தான் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு கென்னடி பாகிஸ்தான் செயலைக் கடுமையாகக் கண்டித்திருப்பதோடு அமெரிக்கா இராணுவ சாதனங்களை கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்றும் பாகிஸ்தானுடனான ராஜதந்திர உறவைத் துண்டிப்பது பற்றி ஜனாதிபதி நிக்ஸன் சிந்திக்கவேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்.

பொலிசார் கைது

கிழக்கு பாகிஸ்தான் பொலிசாரை பாகிஸ்தான் இராணுவத்தினர் கைது செய்து வருகின்றனராம். நாதிக்கல் பொலிஸ் நிலையத்தை விடுதலைப்படையினர் தாக்கியதைத் தொடர்ந்து இந்நடவடிக்கையில் இராணுவம் இறங்கியுள்ளதாம். இவ்விதமான தாக்குதல்களை நடத்துவதற்கு பொலிசார் இரகசியத் தகவல்களை விடுதலைப்படையினருக்கு அளித்து வருவதாகக் கருதியே பொலிசார் கைதுசெய்யப்படுகின்றனராம்.

செயலற்றநிலையில் சிட்டகாங்

சில நாட்களுக்குமுன் விடுதலைப்படையினர் சேதப்படுத்திய கப்பல்கள் சிட்டகாங் துறைமுகத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதினாலும், மூழ்கிய கப்பல்கள் துறைமுக வழியை அடைத்துக்கொண்டிருப்பதினாலும், சிட்டகாங் துறைமுகம் செயலற்ற நிலையில் இருக்கிறதாம்.

வீரர் ரோசா மீண்டும் வெற்றி

பொன், ஆக 30

மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற மற்றுமொரு சர்வதேசப் போட்டியில், இலங்கை வீரர் லூசியன் ரோசா மீண்டும் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். மற்றைய இலங்கை வீரர் சுனில் குணவர்த்தனவும், வீராங்கனை கே. ஜி. பாத்ராவும் வெற்றி பெற்றுள்ளனர்.

5000 மீற்றர் தூரத்தை வீரர் ரோசா 14 நிமிடம் 43·2 விநாடிகளில் ஓடி முதலாவது இடத்தையும், 100 மீற்றர் தூரத்தை வீராங்கனை கே. ஜி. பாத்ரா 12·4 விநாடிகளில் ஓடி 2-வது இடத்தையும், ஆண்கள் பிரிவில் வீரர் சுனில் குணவர்த்தன 10·7 விநாடிகளில் ஓடி 3-வது இடத்தையும் பெற்றனர்.

மாநகர சபை கூட்டம்

யாழ் பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 8-ம் தேதி மேயர் திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தம்பி அன் கோ.
ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்
1. ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)
வருடம் ரூபா 125/-வட்டி கொடுக்கப்படும்
2. ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)
வருடம் ரூபா 63/-வட்டி கொடுக்கப்படும்
குறிப்பு:-
இந்த ஜுபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/-வாங்கப்படும்
மறுவிபரங்களுக்கு:-
தம்பி அன் கோ.
திருநெல்வேலி — வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

"கூட்டுறவு முறை சோஷலிசத்தின் முதற்படி"

பருத்தித்துறை செவ். கூட்டுறவு இயக்கத்தின் மூலமே நாட்டில் ஜனநாயக சோஷலிசத்தை நிலைநாட்டலாம். நேர்மையுடனும் கண்ணியத்துடனும் இயங்கும் கூட்டுறவு முறை சோஷலிசத்தின் முதற்படியாகும்

இவ்வாறு பருத்தித்துறை கூட்டுறவுச் சங்க சமாசத்தின் முதலாவது கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரி திரு மு தம்பிமுத்து கூறினார் இக்கூட்டத்தில் மேல் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவு சமாசத்திற்கு அரசாங்க உதவியுடன் நிரந்தரக் கட்டிடம் அமைக்க வேண்டும்

சகல குடும்பத்தலைவர்களும் அங்கத்துவப் பணமாக ரூபா ஒன்று செலுத்தவேண்டும்

கூட்டுறவு மூலம் விவசாய அபிவிருத்திக்கு உதவ வேண்டும்

வல்வெட்டித் துறையிலும் சமாசத்தின் கிளையொன்று திறக்கப்படல் வேண்டும்

கம்யூ. கட்சி மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாண கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடு செப்டம்பர் 4-ம் 5-ம் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியிலிருந்து முக்கிய பிரமுகர்கள் இம் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

முக்கிய கூட்டமாகவிருப்பதால் சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்கப்பட்டிருப்பதாக கட்சி உறுப்பினர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

உறுப்பினர்கள் மட்டுமே இம் மகாநாட்டிற்கு அனுமதிக்கப்படுவார்களென்றும் ஆறு வருடத்திற்குப் பின் முதல் தடவையாக இம்மகாநாடு நடைபெறுவதால் முக்கிய தீர்மானங்கள் இடம்பெறுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

……

சுழிபுரம் கி. ச. அனுதாபம்

சுழிபுரம், செவ்

"தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் முன்னின்று உழைத்த ஓர் உத்தம வீரன் டாக்டர் ஈ எம் வி. நாகநாதன் மறைவு எமக்கு ஓர் பேரிழப்பாகும். இவரது மறைவால் வருந்தும் யாவர்க்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்,"

இவ்வாறு சுழிபுரம் கிராம சபையினர் ஓர் அனுதாபத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர். சபைத் தலைவர் திரு சு கந்தசுவாமி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

டிப்போவுக்கு பாராட்டு

பருத்தித்துறை செவ்

சிறந்த முறையில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பஸ் சேவையை ஒழுங்கு செய்துள்ள பருத்தித்துறை இ போ ச அதிகாரிகள் பிரயாணிகளினதும் பொதுமக்களினதும் நன்றிக்கும் பாராட்டுக்குமுரியவர்களாவர் முக்கியமாக மணித்தியாலத்துக்கொரு கடுகதி பஸ்சேவை காரணமாக பிரயாணிகள் விரைவாகவும் சௌகரியமாகவும் பிரயாணம் செய்யக்கூடியதாயுமுள்ளது.

இவ்வாறு உடுப்பிட்டி பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு த கங்காதரம் தெரிவித்தார்.

விண்ணப்ப திகதி பிற்போடப் பட்டுள்ளது

கோட்டை, செவ்.

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் இவ்வருடத்திற்கான அகில இலங்கை சைவ சமயப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி பிற்போடப்பட்டுள்ளது.

இப் பரீட்சை செப்டம்பர் மாதம் 15ம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூபா 80 லட்சம் பெறுமதியான பதுக்கல் பொருட்கள்

கோட்டை, செவ்.

ரூபா 80 00000 பெறுமதியான பதுக்கல் பொருட்களை கடந்த சில வாரங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் கண்டுபிடித்துள்ளது.

பால்மா, குழந்தைகள் உணவு, மிளகாய் ஆகியனவே மேற்படி பதுக்கல் பொருட்களில் அதிகமாகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

செலவுப் பணம் வைத்துவிட்டு தற்கொலை

வல்வெட்டித்துறை, செவ்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த நகைத்தொழிலாளியான ஆறுமுகம் சண்முகம் என்பவர் (75வயது) நச்சுத் திராவகம் அருந்தி மரணமானார்

இவரது மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மகன் தம்பிராசா தமது தந்தை பல காலமாக சலரோக நோய் காரணமாக கஷ்டப்பட்டு வந்ததாகவும் இறப்பதற்கு சில நிமிடங்களின் முன் மரணச்செலவுக்கு ரூபா 250 மேசை லாச்சிக்குள் இருப்பதாக தம்மிடம் கூறியதாகவும் தெரிவித்தார். மற்றும் பலர் சாட்சியமளித்த பின் மரணவிசாரணை அதிகாரி திரு. வி பி சுந்தரலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

பொன் கந்தையா நினைவுதினம்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறைத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ப் பிரதேசத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது இடதுசாரியுமான திரு பொன் கந்தையாவின் நினைவு தினம் கரவெட்டியிலும், பருத்தித்துறையிலும் இம்மாதம் 8ந் திகதி கொண்டாடப்படவிருக்கிறது

தென்னிலங்கையிலிருந்து அமைச்சர் சிலர் உட்பட, பிரபல பேச்சாளர்களும் இதில் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிகிறது.

……

மாணவர்களுக்கு மீண்டும் கடன்

கோட்டை செவ்.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மீண்டும் வங்கி மூலம் கடனுதவி வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது

விவசாய கல்வி

சுன்னாகம், செவ்

உலக ஸ்தாபனமாகிய யூனிசெவ் கழகம் இலங்கை கல்வித்திணைக்களத்திற்கு விவசாயக் கல்வியை வளர்ப்பதற்காக விவசாய உபகரணங்களை வழங்கியுள்ளது.

அதில் ஒருபகுதியை ஓமந்தை மகாவித்தியாலயம் பெற்றுள்ளது. பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்திலே விவசாய டிப்புளோமாப் பட்டம் பெற்ற செல்வி கந்தையா இம் மகாவித்தியாலயத்தில் விவசாயக் கல்விக்குப் பொறுப்பாக நியமனம் பெற்றுள்ளார்.

அமைச்சு பொறுப்பேற்கும்

குருநகர், செவ்.

சரவணை - நாரந்தனையை இணைக்கும் பிரதான வீதியை நீர்ப்பாசன பெருந்தெரு மின்சக்தி அமைச்சு பொறுப்பேற்கவுள்ளது. கடந்த 13-ந் திகதி இவ்வீதியை பார்வையிட்ட பகுதிப்பொறியியலாளர் இவ்வீதியை பொறுப்பேற்று அமைப்பதற்கு பிரதம பொறியியலாளருக்குச் சிபார்சு செய்துள்ளார்.

……

இளம் தமிழர் மன்றம் பாராட்டு

ஊரதீவு, செவ்

"எமது கிராமத்திலுள்ள பொது இயக்கங்கள் பலவற்றில் பொறுப்பான பதவிகள் பல வகித்து அருஞ்சேவையாற்றியதன் மூலம் எமக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்த வித்துவான் சைவப் புலவர் இ க கணபதிப்பிள்ளை பி ஏ யின் சைவப் பணியைப் பாராட்டி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் 'சைவசித்தாந்த சரபம்' என்னும் பட்டமளித்திருப்பது ஊரதீவு மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகும். சைவம் நலிவுற்றிருக்கும் இந்நேரத்தில் கணபதிப்பிள்ளை, செஞ்சொற்செம்மணி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரது சேவை தேவையெனக் கருதும் இம்மன்றம் அவர்களது சைவப்பணியைப் பெரிதும் பாராட்டுகிறது எனவும் கூறும் தீர்மானம் ஒன்று ஊரதீவு இளந்தமிழர் மன்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. மன்றத் தலைவர் திரு க மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் ந இராசதுரை, க ஸ்ரீஸ்கந்தராசா, க இராசகுலசிங்கம் ஆகியோர் இவ்விருவரின் சைவப்பணியைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

அமைச்சர் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் ரசாயன தொழிற்சாலையைப் பார்வையிட்ட கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்க பரந்தன் ரசாயன கூட்டுஸ்தாபன தலைவர் திரு பெர்ணண்டோவையும், இயக்குநர்களையும் தொழிலாளர்களையும் வெகுவாகப் பாராட்டினார்.

அமைச்சரை ரசாயன கூட்டுதாபன தலைவர் திரு. பெர்ணண்டோ மாக்குட்டி வரவேற்று அழைத்துச் சென்றார். இவர்களுடன் பரந்தன் ரசாயன விளையாட்டுக்கழக தலைவர் திரு. எஸ். எஸ். சுபாரத்தினம், செயலாளர் திரு. த இராமநாதன் மற்றும் இயக்குனர்கள் தொழிலாளர்கள் சென்றனர். அமைச்சர் தொழிற்சாலையை சுற்றிப்பார்வையிட்டார்.

இத்தொழிற்சாலையில் திறமைமிக்க தலைவரும், ஊக்கமுள்ள இயக்குனர்களும் முயற்சியுள்ள தொழிலாளர்களும் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் இங்கு கடமையாற்றுவதால் இத்தொழிற்சாலை நிச்சயம் முன்னேற்றமடையும் என்றுதான் நம்புவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

பிரவேச வயதைக் கூட்டவேண்டுமாம்

பருத்தித்துறை, செவ்.

அண்மையில் வெளியான அரசாங்க வர்த்தமானியின்படி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியரல்லாத மாணவர் 26 வயதுக்குட்பட்டவராயிருக்க வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து பலர் கல்வி அமைச்சுக்கு முறைப்பட்டுள்ளனர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் உள்ள விசேட நெறிகளுக்கு இதுகாலவரை 32 வயதுக்குட்பட்டவர்கள் மனுப் பண்ணலாமென விதிக்கப்பட்டிருந்தது. எவ்வித முன்னறிவித்தலுமின்றி இத்திடீர் வயது மாற்றமேற்பட்டமையால் பல ஆசிரியரல்லாத மாணவர் இவ்வாண்டு ஆசிரியர் கலாசாலைகளுக்குப் புகும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இவ்வாண்டு மட்டும் வயதை 32 என வைத்திருக்குமாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ தியாகராசா கல்வி அமைச்சரைக் கேட்கவிருப்பதாகத் தெரிகிறது.

'விஞ்ஞானம் வாழ்க்கைக்கு பயன்படவேண்டும்'

பருத்தித்துறை, செவ்

"கைத்தொழில் வளர்ச்சி விஞ்ஞான, தொழில்நுட்ப அத்திவாரத்திலேயே எழுப்பப்படமுடியும். வெறும்புத்தக விஞ்ஞானமும் அதை அடிப்படையாகக் கொண்ட சொற்பொழிவுகளுமன்றி ஆராய்ச்சி அடிப்படையில் ஆக்கபூர்வமான விளைவுகளை சமுதாய முன்னேற்றத்திற்கு அளிக்கக்கூடிய விஞ்ஞான அறிவே நாட்டிற்கு வேண்டும்".

இவ்வாறு விஞ்ஞான வெளியீட்டுச் சங்கத்தலைவர் திரு தொ ம வி சப்பன் தொண்டமானாறு மாணவர் வெளிக்கள நிலையத்திற்கான ஆய்வுகூடத் திறப்பு விழாவில் தலைமைவகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'பொருளியல் அபிவிருத்தியின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று சுயமுயற்சியாகும். இச் சுயமுயற்சி சமுதாயத்தின் தன்னிறைவுக்கு வழிவகுக்க வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்கு கைத்தொழில் வளர்ச்சி அவசியமாகும். ஆனால் இதற்கான ஆரம்ப வேலைகள் பாடசாலைகளில் நடைபெற வேண்டும். விஞ்ஞானக் கல்விப் போதனாமுறையும் அது அணுகப்படும்முறையும் மாறவேண்டும். விஞ்ஞானம் வாழ்வுக்கு உபயோகப்படல் வேண்டும். இந்நோக்கத்துடனேயே கடல்வாழ் உயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி நிலையமொன்றை அதற்கே உரித்தான தொண்டமானாறுச் சூழலில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது போன்ற நிறுவனங்கள் இன்று நாட்டில் ஆங்காங்கு தோன்றி வருகின்றன. இவற்றின் மூலம் ஆராய்ச்சிமனப்பான்மை பரந்துபடுவதற்குக் கூடிய வாய்ப்பு ஏற்படும். அதன் விளைவாக இக்கிராமங்கள் வனப்பு மிகு நகரங்களாக மாறக்கூடிய நிலைமை ஏற்படஇடமுண்டு. நாட்டின் வளம்பெருகினால் சமுதாயங்களிடையே பூசல்களும் எழ முடியாது'.

ஆண்டுப்பொதுக் கூட்டம்

தாவடி, செவ்

சுன்னாகம் சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க 8-வது ஆண்டுப்பொதுக்கூட்டம் இம்மாதம் 5ம் திகதி மேற்படி வித்தியாலய அதிபர் திரு. வே நாகராசாவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

……

பீடி இலை இறக்குமதி நிறுத்தப்படும்

கோட்டை, செவ்

பீடி இலைகள் இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டு உள்ளூரில் விளையும் ஒருவித இலையை இதற்குப்பதிலாக உபயோகிப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது

காடுகளில் விளையும் ஒரு குறிப்பிட்ட செடியை வளர்ப்பதற்கு அரசாங்கம் உதவி வழங்கும் என்றும் கிராமப்புறங்களிலும் இதைப்பயிரிடலாம் என்றும் தேசிய சிறு கைத்தொழில் டைரக்டர் கூறியிருக்கிறார்"

நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

வரணி இடைக்குறிச்சி இளைஞர் விவசாயக்கழக வருடாந்தக் கூட்டம் தெ கை நோ கூ ச சமாச நிர்வாகக் காரியதரிசி திரு க கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ் தம்பிப்பிள்ளை, செயலாளர்; வி குலேந்திரன். பொருளாளர்: க கந்தராசசிங்கம்: ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது'

இளைஞர் விவசாயக்கழகங்களின் பொறுப்பதிகாரி திரு ஸ்ரீஸ்கந்தராசா, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு தம்பிராசா, திரு க இராசரத்தினம் ஆகியோர் பேசினர்.

……

எம்.பி.யின் கோரிக்கை

ஊரதீவு, செவ்வாய்

சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட பதினேழு நெசவு ஆசிரியர்களையும் மீண்டும் வேலைக்கெடுக்குமாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ தியாகராசா கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரிடம் கோரியுள்ளார்.

ஆசிரியரல்லாத மாணவருக்கு வேதனம்

பருத்தித்துறை, செவ்

"இலங்கையிலுள்ள சகல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலுமுள்ள ஆசிரியரல்லாத பயிற்சியாளருக்கு வேதனம் வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை அகில இலங்கை வர்த்தக மாணவர் சங்கச் செயலாளர் திரு செ அ தேவச்சந்திரன் கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர்மூலம் விடுத்துள்ளார். வர்த்தக மாணவ பயிற்சியாளர் விஷயத்தில் இவ்வேதனச்சலுகை பல காரணங்களால் மிக அவசியமெனவும் அவர் மகஜரில் வலியுறுத்தியுள்ளார்.

யாழ் விவசாயிகளுக்கு கலவை செய்யப்பட்ட உரம்

கடன் திருப்பிக்கொடாதவர்களும் சங்கங்கள் மூலம் பெற வசதி

யாழ்ப்பாணம், புதன்
யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு புதியரக உரம் மலிவான விலையில் கிடைக்கவிருக்கிறது. உரக்கூட்டுத்தாபனம் நெல்வயலிடும் விவசாயிகளுக்கென கலவை செய்யப்பட்ட உரத்தை சிறு பைகளில் அடைத்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்க முன்வந்துள்ளது. இவ்வருடகாலபோக நெற்செய்கை ஆரம்ப காலத்தில் இக்கலவையை விநியோகிக்க உரக்கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனைப்பற்றி யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் 'ஈழநாடு' நிருபருக்கு பின்வருமாறு தெரிவித்தார்.

நல் விளைவைத்தரும் வர்க்கங்களாகிய பி ஜீ 11/11, எம். ஐ. 273 ஆகியவற்றைத் தனித்தனி இரண்டு இருத்தல் பொட்டலங்களாக்கி அவற்றிற்கு வேண்டிய உரங்களையும் பெட்டலங்களாக்கி அரைப்பரப்பு நிலத்தை விதைப்பதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வினங்கள் ஏறத்தாழ 100 புசல் தொடக்கம் 120 புசல்கள் வரையும் விளைவைத்தரவல்லவை.

மஞனாகிச் செய்கைக்காக பிக்வி, பிலுவொட், ஆகியவையும் மேற் கூறியவண்ணம் பொட்டலங்களாக்கப்படுகின்றன. இவை ஏறத்தாழ ஒரு ஏக்கருக்கு 90 புசல் விளைவைத் தந்து, கானலையும் தாங்கும் சக்தியுள்ளவை.

இம்மாவட்டத்தில் பல இடங்களில் முதல்முறையிலேயே திடீரென மழை பெய்து பெருவெள்ளமேற்படும் வயல் இடங்களுக்கு வெள்ளத்தைச் சகிக்கத்தக்க இனமாகிய தேவரெத்தியும் எச்-9 யும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இப்பொட்டலங்கள்மூலம் நல்லின நெல்லை பல கமக்காரர்களுக்கு நல்லுக்கு ஒன்றாக கொடுத்து குறுகிய காலத்தில் பெரும்பரப்பில் பரப்புவதற்கு இது ஒரு வழியாகும் என்ற அவர் மேலும் கூறியதாவது:-

இக்காலபோகம் தொடக்கம் இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தார் உரப்பைகளை 56 றாத்தல் கொண்ட பொதிகளாக்கி விநியோகம் செய்வார்கள். யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் வி 1 எனக் குறிப்பிடப்படும் உரக்கலவையில் 168 றாத்தலை இரண்டாம் உழவுடன் விசிறி உழுதல் நன்றாகும். 56 றாத்தல் கொண்ட ஒரு பொதி உரக்கலவையின் விலை ரூபா 9 சதம் 45 ஆகும்.

விதைத்த 2-ம் வாரம், 6-ம் வாரம் 10-ம் வாரத்தின்பின் முறையே 56 றாத்தல் 56 றாத்தல் 84 றாத்தல் யூறியாப் பசளையை மேற்கட்டுப் பசளையாக விசிறினால் மேற்கூறியபடி 120 புசலுக்கு மேலான விளைவைப் பெறலாம். கமக்காரர்கள் தங்கள் சங்கங்களுக்கு முன்பு பெற்ற கடனைத் திருப்பிக் கொடாமல் கடனாளியாக இருந்த போதிலும் இப்புதிய உரப்பொதிகள் அவர்களும் பெற அரசாங்கம் அனுமதி வளங்கியுள்ளது. ஆகையால் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்கு வேண்டிய உரத்தை சங்கத்திலும், புதிய இன நெல்வர்க்கங்களை விவசாய போதனாசிரியர் மூலமும் தத்தம் விவசாய விரிவாக்கச் சேவையாளர் மூலமும் பெற்றுக்கொள்ளலாம் என்றார்

தலைமன்னார் தடுப்பு முகாமில் எவரும் இல்லை

யாழ்ப்பாணம், புதன்
தலைமன்னார் தடுப்புமுகாமில் சென்றசில தினங்களாக எவருமே இல்லை இங்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படும் மற்றும் சிலர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுமிருப்பதாகப் பொலிஸ் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்பும் பிரயாணிகளின் தொகை அதிகரித்திருக்கிறது.

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல்போக்குவரத்து சேவையும் இப்போது அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா திரும்பும் பிரயாணிகள் தொகை அதிகரித்திருப்பதால் மண்டபம் முகாமை மீண்டும் திறப்பதற்கும் அங்கு குடியேற்ற வெளியேற்ற இலாகா அதிகாரிகள் சுகாதார அதிகாரிகளைக் கடமையில் நியமிக்கவும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

மூக்குக் கண்ணாடி யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்
கஸ்தூரியார் வீதியில் கண்டெடுக்கப்பட்ட மூக்குக்கண்ணாடி ஒன்று கஸ்தூரியார் வீதியிலுள்ள முஹிதீன் ஜூவலர்ஸ் உரிமையாளர் ஜனாப் தையூப்பினால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

நல்லை

இசைவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், புதன்
பிற்பகல் 5-30 மணி அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள் பாட்டு. மாலை 5-45 மணி செல்வி லலானி சதாசிவம் - பாட்டு, 6-15 மணி: செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதர்- பாட்டு. செல்வி கோமளா சுந்தரவா- வயலின், செல்வன் கனக சுந்தரம் - மிருதங்கம்

இரவு 7-30 மணி: திரு வி இவராசா-பாட்டு, பிரம்மஸ்ரீ எஸ் சர்வேஸ்வரசர்மா - வயலின், திரு ரி பாக்கியநாதன்- மிருதங்கம், இரவு 9-00 மணி: திரு எஸ். சோமசுந்தரம் பாட்டு, இரவு 10-30 மணி: திரு வி கே குமாரசாமி- வயலின், திரு ரீ பாக்கியநாதன்- மிருத.

இன்றுமுதல்...

6-ம் பக்கத்தொடர்ச்சி

மேலும் பதுக்கல், கொள்ளைலாபமடித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவர்கள் மீதும் [illegible] விதியை மீறுபவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கையெடுக்க இக்கமிட்டிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 2 வருடங்களுக்கு மக்கள் கமிட்டிகள் பரீட்சார்த்தமாக செயல்படுத்தப்படும். வெற்றிகரமாக நல்லமுறையில் இக்கமிட்டிகள் இயங்கினால் பின்னர் இக்கமிட்டிகளின் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பை மக்களிடமே அரசு விட்டுவிடும்.

மக்கள் கமிட்டிகள்

மக்கள் கமிட்டிகள் இலாகாவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கமிட்டிகளின் வேலைகளை மேற்பார்வையிட கமிஷனர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள திரு வைனல் பர்னாண்டோ அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளரும் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமாவார். இவர் திரு பண்டாரநாயக்காவின் கீழ் அரசாங்க தகவல் இலாகாவின் அதிபராகக் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பதவியை ஏற்க முன்னர் இவர் திருக்கோணமலை அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார்.

'நிர்வாகத்தோடு மக்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் மையமாக மக்கள்கமிட்டி விளங்கும் எனப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா முன்னர் கூறியிருந்தார்

(இ பி ஏ)

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் புனரமைப்பு

நிதி அமைச்சர் யோசனை

கோட்டை, செவ்
உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை புனரமைப்புச் செய்யவேண்டுமென்ற நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா யோசனை கூறியிருக்கிறார். நேற்று கொழும்பில் நடைபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இம்மகாநாட்டில் பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள பொதுஜனங்களின் தொகைகளுக்கு ஏற்பவே இனிமேல் நிதிஒதுக்கப்படும் என்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றாலும் உள்ளூராட்சி மன்றங்களை நியாயமான முறையில் பாகுபாடின்றி நடத்தவேண்டும் என்றும் சொன்னார்.

சகல உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் கலந்துகொண்ட இம்மாநாட்டில் நெடுஞ்சாலை நீர்ப்பாசன அமைச்சரும் பேசினார்.

ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்
பட்டினசபை செயலாளர்களுக்கு பேராதனையில் இன்று ஆரம்பிக்கப்படவிருந்த பயிற்சி வகுப்பு இம்மாதம் 6-ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆலயங்களைப் போல் பாடசாலைகளை பேணவேண்டும்

காரதீவு, செவ்வாய்
'பாடசாலைகளின் முக்கிய தேவைகள் அனைத்தையும் அரசாங்கமே நிறைவேற்றும் என நாம் எதிர்பார்க்கக்கூடாது. பாடசாலைகள் ஆலயங்கள் போன்றவை. ஆலயங்களைப் பொதுமக்கள் எங்ஙனம் பேணிப்பாதுகாக்கிறார்களோ, அதேபோன்று கல்வி ஆலயங்களான பாடசாலைகளையும் பொதுமக்கள் தம் பொருள் போற்றிப்பேண வேண்டும். வருங்கால சமுதாயத்தின் எதிர்காலமே கல்விச்சாலைகளின் கரத்தின் மீது தங்கியுள்ளது.'

காரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. சி இரத்தினசபாபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அங்குரார்ப்பணத் தீர்மானத்தை ந இராசதுரை பிரேரிக்க பொ வைத்திலிங்கம் அனுவதித்தார். காரதீவு இளந்தமிழர் மன்றத் தலைவர் திரு. க. மகேந்திரன், க ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

நிர்வாகிகள் தேர்தலின்போது காப்பாளர்களாக புங்குடுதீவுகிராமசபை உறுப்பினர் திரு செ சோமசுந்தரம். ஆசிரியை திருமதி த தியாகராசா ஆகியோரும் தலைவராக தலைமையாசிரியர் திரு சி இரத்தினசபாபதியும். துணைத்தலைவராக க மகேந்திரனும், செயலாளராக பொன். வைத்திலிங்கமும், துணைச் செயலாளராக கா கந்தசாமியும் பொருளாளராக ந இராசதுரையும், துணைப்பொருளாளராக ச. சுந்தரலிங்கமும், எண்பார்வையாளராக க ராசகுலசிங்கமும், செயற்குழு உறுப்பினர்களாக க ஸ்ரீஸ்கந்தராசா, சி சசிகாந்தன், த நவரத்தினசிங்கம், இ கணேசன் இ இராமலிங்கசர்மா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

வருடாவருடம் விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதெனவும், பாடசாலையின் முன்னேற்றத்துக்குஉழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டின் அபிவிருத்தியில் என்ஜினியர்களுக்கு உரியஇடம்

அமைச்சர் மைத்திரிபால வாக்குறுதி

கொழும்பு, செவ்
திறமைவாய்ந்த பொறியியல் நிபுணர்களை நீர்ப்பாசனம், மின்சக்தி, நெடுஞ்சாலைகள் வீடமைப்பு போன்ற துறைகளில் தேசிய கொள்கைகளை நிர்ணயிக்கும் பொறுப்பும் முழு அதிகாரமுமுள்ள நிரந்தரக் காரியதரிசிகளாக முதல் தடவையாக நியமிக்க எடுக்கப்பட்ட முடிவு அரசின் உறுதியான கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். இதற்கு முன்பு, பொறியியலாளர்களுக்கு நாட்டில் அவர்களுக்குரிய இடம் கொடுக்கப்படவில்லை என்று கூட்டணிக் கட்சிகள் கருதி வந்திருக்கின்றன.

மேற்கண்டவாறு காணி நீர்ப்பாசனமின்சக்திநெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா நேற்று பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அரசாங்க சேவை பொறியியலாளர் சங்கத்தின் 7வது ஆண்டு விழாவில் பேசுகையில்குறிப்பிட்டுள்ளார்.

பொறியியலாளர்கள் நாட்டின் அபிவிருத்தியில் இரண்டாவது இடத்தையே வகிப்பார்கள் என்று நிலவிவந்த கருத்தை அமைச்சர் மறுத்தார். மாகாண நிர்வாகத் துறையில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து இன்னமும் இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார் பொறியியலாளர்களுக்குள்ள குறைகளைப் பற்றித்தான் அறிந்து கொள்ள விரும்புவதாகவும் அவற்றை விரைவில் தீர்த்து வைக்க முயல்வதாகவும் குறிப்பிட்டார்

பொறியியலாளர்களாகிய உங்கள் கையில் தேசியக் கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கி முடிவுகள் எடுக்கும் அதிகாரம் இருக்கிறது இந்த அதிகாரத்தில்தான் உங்களுடைய பொறுப்பும் தகுதியும் தங்கியுள்ளது. நீங்கள் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுமல் போனால் நானும் என் பொறுப்பிலிருந்து தவறி விடுவேன் எனவே நாம் இருசாராரும் மக்களுக்கு பதில் சொல்லவேண்டியவர்களாவோம் என்பதை உணர்வீர்கள்

லண்டன்செல்வார்

புதுடில்லி ஆகஸ்ட் 31
இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஒக்டோபர் 31-ம் திகதி பிரிட்டனுக்குச் செல்வார். அவர் அங்கு நவம்பர் 3-ம் திகதிவரை அங்கு தங்கியிருப்பார். இக்காலத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வர்ட் ஹீத்துடன் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினை, மற்றும் உலகப்பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது இவ்விஜயத்தின் பின் பிரான்ஸ் மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குஞ் செல்வார் காலமும் சூழலும் வாய்ப்பளித்தால் அமெரிக்காவுக்குச் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிவாக்கு

வாழ்வில் ஏற்படும் கஷ்டங்களைக் குறைக்க ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்வதற்கன்றி வேறு எதற்காக நாம் உயிர் வாழ்கிறோம்.

... ஜார்ஜ்எலியட்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம்
16-ந் திகதி (1-9-71)

நிலமங்கை சிரிக்கிருள்!

'இலமென்றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்' என்பது வள்ளுவர் வாக்கு.

ஒன்றும் இல்லையே என்று சும்மா இருப்பவர்களைப் பார்த்து பூமித்தாய் சிரிக்கிருள் என்பது இதன் பொருள். சில தினங்களுக்கு முன் கொக்குவில் திருவள்ளுவர் இளம் விவசாயிகள் கழகத்தின் பதினேந்தாவது ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றபோது இதில் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலமும் யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. பொ. மாணிக்கவாசகரும் வள்ளுவரின் இக்குறளுக்குச் சிறந்த முறையில் விளக்கம் கொடுத்திருக்கின்றனர். இந்த விளக்கத்தை அவர்கள் கொடுத்தாலும் வள்ளுவர் கூறியதைச் செயல்படுத்துவது மக்களின் பொறுப்பு. இதற்கு அவர்களின் விளக்கம் தூண்டுகோலாக இருக்க வேண்டும்.

அரசாங்க உத்தியோகம் பார்ப்போர் பெறும் சம்பளத்தைவிட விவசாயத்தினுல் பெறும் வருமானம் அதிகமென்று நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் அந்தவிழாவில் சுட்டிக்காட்டி மிளகாய், வெங்காயம் உற்பத்தி செய்யும் யாழ்ப்பாண விவசாயிகள் சுபீட்சமடைந்து வருகின்றனரென்பதையும் எடுத்துக் காட்டியிருந்தார்.

இதேவிழாவில் பேசிய விவசாய விரிவாக்க அதிகாரி திரு பொ. மாணிக்கவாசகர், 'படித்தோம், பட்டம் பெற்றோம் அரசாங்கத்தில் பதவி கிட்டவில்லை என்ன செய்வோம். எம்மிடம் வேறொன்றும் இல்லையே என்று எண்ணிச் சோம்பித் திரிவோரைப் பார்த்துப் பூமாதேவி எள்ளி நகையாடுகிருள்' என்று வள்ளுவரின் குறளுக்கு அருமையாக விளக்கம் கொடுத்திருந்தார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்லாயிரம் ஏக்கர் நிலம் கற்பாறையின் கீழ்க் காத்திருக்கிறது. மாவட்டரீதியில் இன்னுமோர் பல்லாயிரம் ஏக்கர் நிலம் வடிகாலமைக்கப்பட்டும் உவர் மீட்டும் பயன்தரும் வகையில் பயிர் செய்யக் காத்திருக்கிறது என்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிருர்.

வடபகுதி மக்கள் உழைப்புக்குப் பெயர் பெற்றவர்கள். ஆழக்கிணறு தோண்டி நீரைத் துலா அமைத்து நீர் பாய்ச்சிய யாழ்ப்பாண மக்களைக் கண்டு பேராச்சரியப்பட்டனர், வெளிநாட்டவர் பலர். அது ஒரு காலம். இன்று படித்துப் பட்டம் பெற்று வேலையில்லையேயென்று திரிவோர் அதிகரித்திருக்கும் ஒரு பகுதியாகக் காட்சியளிக்கிறது இந்தப்பகுதி. நிலம் இருக்கிறது உழைப்புச் சக்தி இருக்கிறது; மூளைப்பலம் இருக்கிறது ஆனால் ஊக்கமும் உற்சாகமும் தான் குறைந்திருக்கிறது.

குடாநாட்டில் பல்லாயிரம் ஏக்கர் நிலம் கற்பாறையின் கீழிருக்கிறது. கற்பாறையை அகற்றி சமம் செய்வதென்பது தனிப்பட்டவர்களால் சுலபமாகச் செய்யக் கூடிய விஷயமல்ல. கட்டிடங்களுக்குக் கல் வேண்டும். கற்பாறைகளை அகற்றுவதன்மூலம் கட்டிடத் தேவையை நிறைவேற்றும் அதேசமயம் பயிர்ச் செய்கைக்கும் வாய்ப்பேற்படுகிறது. எனவே இந்தப் பாரிய வேலையை அரசாங்கமே முன்வந்து செய்யலாம்.

குடாநாட்டுக்கு வெளியே வடமாகாணத்தில் பூநகரி, கரைச்சி, துணுக்காய்ப் பகுதிகளில் மா, பலா, நெல்லி, பருத்தி, மரமுந்திரிகை போன்ற பல பயன்தரும் தோப்புக்கள் அமைக்கக் கூடிய நிலங்கள் நிறைய இருக்கின்றன. இவற்றை நன்கு பயன்படுத்தலாம். சில வருடங்களுக்குமுன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இப்போது இப்பகுதிகளில் மக்கள் குடியேறி தம்மாலான முயற்சிகளைச் செய்து வருகின்றனர். என்றாலும் இன்னும் வாய்ப்புவசதிகளும் அளிக்கப்பட்டால் விவசாயம் விஸ்தரித்து உணவுப் பொருள்களில் நாடு தன்னிறைவு பெறுவதற்கு வடபகுதி மக்கள் முன்னிற்பர் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு வழியாகப் பூநகரிக்குச் செல்லும் பாதை இன்னும் சரியாகச் செப்பனிடப்படவில்லை. சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையில் மகாதேவாப் பாலம் அமைக்கும் முயற்சி பழங்கதையாகப் போய்விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

தரிசுநிலங்களைப் பயன்படுத்தி விவசாயத்தை விஸ்தரித்து உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மக்கள் முன்வந்து உழைக்கத்தயாராயிருந்தால் மட்டும் போதாது. தரிசு நிலங்களைப் பயன்படுத்துவதற்குச் சரியான முறையில் திட்டமிட்டு, பாசன வசதியும் போக்குவரத்து வசதியும் செய்து கொடுத்து உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும். அரசாங்கம் இதில் தவறவில்லையானுலும் இன்னும் எவ்வளவோ செய்யலாமென்பது மக்கள் அபிப்பிராயமாகும்.

மக்களுக்கு உணவளிக்கக் காத்திருக்கும் பூமித்தாயைப்பயன்படுத்தாமல் மக்கட் பேற்றைத் தடுக்கமுனையும் மக்களைக் கண்டு நிலமங்கை நகைத்தல் நியாயமல்லவா?

இன்று முதல் செயல்பட ஆரம்பிக்கும் மக்கள் கமிட்டிகள்

அவற்றின் அமைப்பும் அதிகாரங்களும்

மக்களுக்கு நிர்வாகத்தோடு தொடர்பு ஏற்படுத்தும் நோக்குடனேயே மக்கள் கமிட்டிகள் நிறுவப்படுகின்றன. இன்று முதல் இவை செயல்படவிருக்கின்றன.

இந்த மக்கள் கமிட்டிகளை அமைப்பது என 3 கட்சிகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி தேர்தலின்போது உறுதியளித்திருந்தது. 1970-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இத்தேர்தலின்போது ஐக்கியதேசியக்கட்சி இந்தக் கமிட்டிகள் நிறுவப்படுவதைக் கண்டித்தது. அப்பொழுது பிரதமராகவிருந்த திரு. டட்லி சேனநாயக்கா இந்த மக்கள் கமிட்டிகள் நிறுவப்பட்டால் இதுவரை மக்கள் அனுபவித்துவந்த ஜனநாயக உரிமைகள் யாவும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும் என கூட்டங்களில் உரையாற்றினுர். இத்தேர்தலில் ஐக்கிய முன்னணி அமோக வெற்றியீட்டி அதிகாரத்தைக் கைப்பற்றியதும் மக்கள் கமிட்டி அமைப்பது குறித்துத் தான் அளித்த வாக்குறுதியைச் செயல்படுத்த ஆரம்பித்தது. மக்கள் கமிட்டிகள் பற்றியும் அவற்றின் பலாபலன்கள் குறித்தும் மக்களுக்குப் பத்திரிகை, வானெலி ஆகியன மூலம் பிரச்சாரம் செய்தது. ஆட்சி மன்றத்திலும் மக்கள் கமிட்டி பற்றிய வெள்ளை பத்திரிகைபோன்று சமர்ப்பிக்கப்பட்டது. எம். பி.க்களும் பொதுமக்களும் மக்கள்கமிட்டி நிறுவப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தவே அரசாங்கம் மக்கள்கமிட்டி மசோதாவைத் தயாரித்தது. இவ்வருட முற்பகுதியில் ஆட்சி மன்றம் இம்மசோதாவை அங்கீகரித்தது.

எதிர்ப்பு அரசியல்கட்சிகளின்பீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் இம்மசோதா ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. பொதுநிர்வாக உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா இதைத் தயாரித்திருக்கிருர்.

கமிட்டியின் அமைப்பு

மசோதாவில் குறிப்பிட்டபடி ஒவ்வொரு மக்கள் கமிட்டியிலும் 11 அங்கத்தவர்கள் இடம் பெறுவர். கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள், எம். பி.க்கள் ஆகியோரின் சிபார்சின் பேரில் மேற்படி 11 அங்கத்தவர்களும் பொது நிர்வாக அமைச்சரால் நியமிக்கப்படுவர். இப்பதினுெரு அங்கத்தவர்களில் 3 பேர் 18—21 வயதுக்குட்பட்டவர்களாகவிருப்பர். உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் ஒரு வட்டாரப் பகுதி இக்கமிட்டியின் நிர்வாகத்தில் உள்ளடங்கிய பகுதியாகவிருக்கும். ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு உள்ள மக்கள் கமிட்டிகளின் விவகாரங்களில் கலந்து கொள்வார்கள். ஆனுல் இவர்களுக்கு இக்கமிட்டியில் வாக்களிக்கும் உரிமை இருக்கமாட்டாது.

கமிட்டியின் வேலைகள்

அரசாங்கத்தின் உதவியோடு இயங்கும் இலாகாக்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் மேல் இம்மக்கள் கமிட்டிகள் கண்ணும் கருத்துமாகவிருக்கும். வீண்விரயம், கடமையில் கவலையீனம், அரசாங்க நிதியைத் தவறாக உபயோகித்தல், லஞ்ச ஊழல் போன்றவற்றை கண்டுபிடிக்கும் முகமாகவே இக்கமிட்டிகள் மேற்படி நிறுவனங்களில் கவனமாகவிருக்கும். பாவனையாளர்களுக்குத் தேவையான பொருள்கள் தடையின்றி விநியோகிக்கப்படுவதையும் இக்கமிட்டி கவனிக்கும்.

மேலும் இவை கள்ளக் கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம், சூது, கொள்ளை லாபமடித்தல் போன்ற இன்னோரன்ன பல சட்டவிரோதச் செயல்களின் மேலும் விழிப்பாயிருக்கும். இத்துடன் ஒவ்வொரு கமிட்டியும் அவ்வப் பகுதியிலுள்ள மக்களின் உடல், மன, ஆன்மீக வளர்ச்சிக்கு தேவையானவற்றைக் கணித்து மக்களுக்கு உதவி அளிப்பதோடு இனமத ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுப்பனவாக அமையும். அவ்வப் பகுதியிலுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவும் பணியும் இக்கமிட்டிகளையே சாரும்.

அதிகாரம்

மேற்படி வேலைகள் யாவற்றையும் செவ்வனே செய்யக் கமிட்டிக்குப் போதியளவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விசாரணைகள் நடாத்தவும் தம் பகுதியிலுள்ள அரசாங்க இலாகாக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து எந்த விடயத்திலும் பதில்கள் பெறவும் இவற்றின் தஸ்தாவேஜுக்களைப் பார்வையிடவும் வர்த்தக ஸ்தாபனங்கள் மீது திடீர் பரிசோதனை மேற்கொள்ளவும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மக்களின் புகார்களை விசாரித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் இவற்றிற்கு அதிகாரம் உண்டு. மேலும் மிகுச்சட்டம், நிறுவை அளத்தல் விதி ஆகியவற்றை மீறுபவர்கள்

5-ம் பக்கம் பார்க்க

மரண அறிவித்தல்

செ. கதிராசிப்பிள்ளை

கைதடி வடக்கைச் சேர்ந்த திருமதி செல்லையா கதிராசிப்பிள்ளை காலமானுர். இவர் திரு சி. செல்லையாவின் அன்பு மனைவியும் சி. செ. இலங்கையர் (நெஷனல்வங்கி, கண்டி) சி. செ. இராசையா (கொட்டன் எஸ்டேட். களவானை) திருமதி சிவபாக்கியம் சிவபாதசுந்தரம் (சிங்கப்பூர்) திருமதி சிவமணிதேவி பாலச்சந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும் திரு ஆ. பாலச்சந்திரனின் (யாழ் மாநகரசபை) மாமியாருமாவர். அன்னரது சமஸ்கிரியைகள் இன்று புதன்கிழமை (1-9-71) மாலை 4 மணிக்கு கைதடி மயானத்தில் நடைபெறும். 2654

தேவை

பழைய பித்தளை அல்லது பாவிக்க முடியாத நிலையிலுள்ள செம்புச் சாமான்கள் தேவை. தகுந்த விலை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சாமுவேல்சன் அன் கொம்பனி லிமிடெட், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

வாடகைக்கு

வீடு 38, கின்னர் வீதி, யாழ்நகர் சிறிய குடும்பம் வசிக்க நவீன வசதிகளுடன் மின்சாரம், பைப்தண்ணீர் தொலைபேசி தொடர்புகளுடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் சந்திக்கவும். 195, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7229. 3532

மரண அறிவித்தல்

வி. கந்தையா (செக்கர்)

உடுவிலைச் சேர்ந்த ஓய்வுபெற்ற புகையிரதப்பகுதி செக்கர் திரு. வி. கந்தையா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் இ. போ. ச. கண்டக்டர் வி. கே. சுந்தரலிங்கம், இரத்தினசிங்கம், கெங்காதரன் பரமசிவம், நகுலேஸ்வரன், திலகமலர், மீனலோசனி, யோகேஸ்வரி, ஆகியோரின் அருமைத் தந்தையும் இளைப்பாறிய இ.போ. ச. லிகிதர் வி. பொன்னுத்துரையின் (சோதிடர்) மைத்துனருமாவர். அன்னரின் ஈமக்கிரிகைகள் இன்றுபுதன்கிழமை (1-9-71) காலை 11 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். தகவல் வி. பொன்னுத்துரை. 2653

ஊரதீவு, செல்வராய் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களாக அண்மையில் புங்குடுதீவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐவரில் மூன்று பெண்களுக்கு புங்குடுதீவிலுள்ள பாடசாலைகளிலும், ஏனைய இரு ஆண்களுக்கு நெடுந்தீவிலும் வடமாநிலக் கல்விபதி நியமனம் வழங்கியுள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.